# யூன் – 29 – சனி

## புனிதர்கள் பேதுரு மற்றும் பவுல்

**நான் ஆண்டவரைப்பற்றிப் பெருமையாகப் பேசுவேன்: எளியோர் இதைக் கேட்டு அக்களிப்பர். திபா. 34:2**

---

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 12 : 1 - 11

அக்காலத்தில் ஏரோது அரசன், திருச்சபையைச் சார்ந்த மக்கள் சிலரைப் பிடித்துக் கொடுமைப்படுத்தினான்.யோவானின் சகோதரரான யாக்கோபை வாளால் கொன்றான். அது யூதருக்கு மகிழ்ச்சி அளித்ததைக்கண்டு அவன் தொடர்ந்து பேதுருவையும் கைது செய்தான். அது புளிப்பற்ற அப்பவிழா நாள்களில் நடந்தது.
அவரைப் பிடித்துச் சிறையில் அடைத்துக் காவல் செய்யுமாறு நான்கு குழுக்களிடம் அவன் ஒப்புவித்தான். பாஸ்கா விழாவுக்குப்பின் மக்கள் முன்பாக அவரது வழக்கை விசாரிக்கலாம் என விரும்பினான்.பேதுரு இவ்வாறு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது திருச்சபை அவருக்காகக் கடவுளிடம் உருக்கமாக வேண்டியது.ஏரோது அவரது வழக்கைக் கேட்பதற்கு முந்தின இரவில், பேதுரு படைவீரர் இருவருக்கு இடையே இரு சங்கிலிகளால் கட்டப்பட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். காவலர்கள் வாயிலுக்கு முன் சிறையைக் காவல் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது ஆண்டவரின் தூதர் அங்கு வந்துநின்றார். அறை ஒளிமயமாகியது. அவர் பேதுருவைத் தட்டியெழுப்பி, "உடனே எழுந்திடும்" என்றுகூற, சங்கிலிகள் அவர் கைகளிலிருந்து கீழே விழுந்தன. வானதூதர் அவரிடம், "இடைக்கச்சையைக் கட்டி மிதியடிகளைப் போட்டுக்கொள்ளும்" என்றார். தூதர் அவரிடம், "உமது மேலுடையை அணிந்து கொண்டு என்னைப் பின்தொடரும்" என்றார்.பேதுரு வானதூதரைப் பின் தொடர்ந்து சென்றார். தூதர் மூலமாக நடந்தவையெல்லாம் உண்மையென்று அவர் உணரவில்லை. ஏதோ காட்சி காண்பதாக அவர் நினைத்துக்கொண்டார்.அவர்கள் முதலாம் காவல் நிலையையும், இரண்டாம் காவல் நிலையையும் கடந்து நகருக்குச் செல்லும் இரும்புவாயில் அருகே வந்தபோது அது அவர்களுக்குத் தானாகவே திறந்தது. அவர்கள் வெளியே வந்து ஒரு சந்து வழியாகச் சென்றார்கள். உடனே வானதூதர் அவரைவிட்டு அகன்றார்.பேதுரு தன்னுணர்வு பெற்றபோது, "ஆண்டவர் தம் வானதூதரை அனுப்பி ஏரோதின் கையிலிருந்து என்னை விடுவித்து, யூத மக்கள் எதிர்பார்த்த எதுவும் நிகழாதவாறு என்னைக் காத்தார் என்று நான் உண்மையாகவே அறிந்துகொண்டேன்" என்றார்.

**பதில்பாடல் :** எல்லா வகையான அச்சத்தினின்றும் ஆண்டவர் என்னை விடுவித்தார்.

## இரண்டாம் வாசகம் : 2 திமோத்தேயு 4:6–8,17-18

அன்பிற்குரியவர்களே, நான் இப்போதே என்னைப் பலியாகப் படைக்கிறேன். நான் பிரிந்து செல்லவேண்டிய நேரம் வந்து விட்டது.நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார் நீதியான அந்த நடுவர் எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுவார் என விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்குமே தருவார்.நான் அறிவித்த செய்தி நிறைவுற்று, அனைத்து நாட்டவரும் அதனைக் கேட்க வேண்டுமென்று ஆண்டவர் என் பக்கம் நின்று எனக்கு வலுவூட்டினார் சிங்கத்தின் வாயிலிருந்தும் என்னை விடுவித்தார்.தீங்கு அனைத்திலிருந்தும் அவர் என்னை விடுவித்துத் தம் விண்ணரசில் சேர்த்து எனக்கு மீட்பளிப்பார். அவருக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

## நற்செய்தி : மத்தேயு 16 : 13 - 19

அக்காலத்தில்இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம்சீடரை நோக்கி, "மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?" என்றுகேட்டார்.அதற்கு அவர்கள், "சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறுசிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிறஇறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்" என்றார்கள். "ஆனால் நீங்கள், நான்யார் எனச் சொல்கிறீர்கள்?" என்று அவர்கேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, "நீர் மெசியா, வாழும் கடவுளின்மகன்" என்று உரைத்தார். அதற்கு இயேசு, "யோனாவின் மகனான சீமோனே, நீ பேறுபெற்றவன். ஏனெனில் எந்தமனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை மாறாக விண்ணகத்திலுள்ள என்தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக்கூறுகிறேன் உன் பெயர் பேதுரு. இந்தப்பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" என்றார்.

**தியானம் :** திருச்சபையின் இரு பெரும் தூண்களான இராயப்பர், சின்னப்பர் (பேதுரு, பவுல்) இருவருக்கும் இன்று விழா எடுக்கிறோம். இருவரது ஆளுமையையும் அலசிப் பார்த்தால் எண்ணற்ற வேறுபாடுகளைக் காண்கிறோம்: பேதுரு பாமரர், பவுல் கற்றறிந்த வல்லுனர். பேதுரு யூதப் பண்பாட்டில் வளர்ந்தவர், பவுல் கிரேக்க சிந்தனையில் வளர்ந்தவர். பேதுரு உணர்ச்சி வயப்படுபவர், பவுல் நிதான சிந்தனையாளர் பேதுரு இயேசுவுடன் 3 ஆண்டுகள் வாழ்ந்தவர், பவுல் உயிர்த்த இயேசுவை மட்டுமே கண்டவர். பேதுரு யூத மக்களிடையே அதிகமாகப் பணியாற்றியவர், பவுல் புற இனத்தாரிடையே அதிகமாகப் பணி செய்தவர். பல வேறுபாடுகள் இருந்தாலும்கூட, திருச்சபை இவர்கள் இருவரையும் சம வணக்கமும், புகழும் பெறுபவர்களாகக் கருதி ஒரே நாளில் இருவருக்கும் விழா எடுக்கிறது. காரணம், வேறுபாடுகளையும் தாண்டி, இருவருக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன: இருவரும் இயேசுவுக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்தனர். இருவரும் தங்கள் தகுதியின்மையை ஏற்றுக்கொண்டு, இறைவனிடம் தங்களைக் கையளித்தனர். இருவரும் திருச்சபை வளர்ச்சிக்காக தியாகங்கள் செய்தனர். இருவரும் புற இனத்தாருக்கும் ஒளியாக விளங்கினர். இருவரும் நற்செய்தி அறிவிப்பில் சுடர்விட்டனர். கிறித்தவர்களாகிய நம்மிடையே பல வேறுபாடுகள் இருந்தாலும், நற்செய்தி அறிவிப்பின் சாட்சிகளாக அனைவரும் இணைந்து உழைப்போம்.